தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

# பற்களை பிடுங்கிய விவகாரத்தில் மாவட்ட நீதிபதி விசாரணை நடத்த வேண்டும்-காவல் சித்ரவதைக்கு எதிரான கூட்டு இயக்கத்தினர் வலியுறுத்தல்

தினத்தந்தி ஏப்ரல் 2, 12:19 am




திருநெல்வேலி காவல் சித்ரவதைக்கு எதிரான கூட்டு இயக்கம் சார்பில் மக்கள் கண்காணிப்பு இயக்குனர் ஹென்றி டிபேன் நெல்லையில் நிருபர்களிடம் கூறியதாவது:- நெல்லை மாவட்டம் அம்பை உட்கோட்டத்திற்கு உள்பட்ட போலீஸ் நிலையங்களில் பல்வேறு வழக்குகளில் விசாரணைக்கு வருபவர்களை அம்பை உதவி போலீஸ் சூப்பிரண்டு பல்பீர் சிங் பொறுப்பேற்ற நாளில் இருந்து சித்ரவதை செய்துள்ளார். இதனை பாதிக்கப்பட்டவர்களின் வாக்குமூலம் மற்றும் சம்பந்தப்பட்டவர்களின் சாட்சிகள் மூலம் அறிய முடிகிறது. இதுவரை 48 நபர்களின் பற்கள் உடைக்கப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது.

https://www.dailythanthi.com/News/State/the-district-judge-should-conduct-the-trial-933240